**இலங்கையின் பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர்வடிப்பகுதிகள் மற்றும் நக்கிள்ஸ் மலைத்தொடரின் நீர்ப்பிடிப்புப் பகுதியின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாயத் தோட்ட சமூகங்களின் காலநிலை மீள்தன்மையை வலுப்படுத்துதல் செயற்திட்டம் - 2023**

---

இலங்கையின் பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர்வடிப்பகுதிகள் மற்றும் நக்கிள்ஸ் மலைத்தொடரின் நீர்ப்பிடிப்புப் பகுதியின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாயத் தோட்ட சமூகங்களின் காலநிலை மீள்தன்மையை வலுப்படுத்துதல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் பசுமை காலநிலை நிதி மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (ஐயூசீஎன்) என்பவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 2022 சனவரி 10 ஆம் திகதிய அங்கீகார முதன்மை ஒப்பந்தத்தின் உப பிரிவு 17.01(ஆ) மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மற்றும் இயற்கை மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம் (ஐயூசீஎன்) என்பவற்றுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட 2022 ஒகஸ்ட் 19 ஆம் திகதிய அமுல்படுத்தல் உடன்படிக்கையின் உப பிரிவு 5.16 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு மற்றும் விவசாய வனவியல் ஆராய்ச்சிக்கான சர்வதேச மன்றம் (ஐசீஆர்ஏஎவ்) ஆகியன செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் அமுலாக்கல் முகவராக உள்ளனர். பண்ணை மற்றும் நில முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துதல், நீர் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் காலநிலை தொடர்பான அபாயங்களைத் தணிப்பதற்காக சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் நக்கிள்ஸ் மலைத்தொடரின் பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் பள்ளத்தாக்குகள், நீர்வடிப்பகுதிகள் மற்றும் கீழ்நிலைப் பகுதிகளில் வாழும் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாய பெருந்தோட்ட சமூகங்களின் காலநிலை பின்னடைவை வலுப்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். காலநிலை நெகிழ்திறன் கொண்ட நிலையான நில மேலாண்மை, நிலையான நில மேலாண்மைக்கான பாதுகாப்பான நிதி வழிமுறைகள், நிறுவன திறனை வலுப்படுத்துதல் மற்றும் திட்ட மேலாண்மை ஆகிய நான்கு கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயல்பாடுகள் செயல்படுத்தப்படுகின்றன. மானிய உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,672 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48.98 மில்லியனானதுடன் அதில் ரூபா 12,729 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 39.78 மில்லியன் பசுமை காலநிலை நிதியத்தினால் (ஜீசீஎவ்) நிதியளிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எஞ்சிய ரூபா 9.2 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்க எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2023 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2029 ஜனவரி 16 அளவில் பூர்த்திசெய்ய திட்டமிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது

கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 32 (எல்கேஏஎஸ்) பிரிவு 11 (இ) இன் பிரகாரம் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்த ரீதியான உரிமையொன்றை நிதிச் சொத்தொன்றாக இனங்காண முடியுமான போதிலும், பெற்றுக்கொள்ளப்பட்டு திறைசேரியில் வைக்கப்பட்ட ரூபா 905 மில்லியன் பெறுமதியான நிதிகள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் உரிமையான்மையின் கீழ் பெறவேண்டிய மீதியாக இனங்காணப்படவில்லை. | 905 | கணக்கீட்டில் காசு அடிப்படையினைப் பயன்படுத்தும் போது, வருமானங்கள் மற்றும் செலவுகள் காசு பெறப்படும்போது அல்லது செலுத்தும்போது மட்டுமே வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே, திறைசேரியிலிருந்து பெறவேண்டிய பணத்தை பெறவேண்டிய காசாகக் காட்ட முடியாது. | திறைசேரியில் வைக்கப்பட்டுள்ள நிதி, நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 11 மில்லியன் ஆனது 2023 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்காக மகாவலி ஆலோசனைப் பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் செயற்திட்டத்திற்குச் செலுத்த வேண்டியதாக கணக்கிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அது | 11 | நக்கிள்ஸ் திட்டத்தின் மூலம் மகாவலி ஆலோசனை பணியகத்திற்கு வழங்கப்பட்ட முற்பணம் 2023 ஆம் ஆண்டுக்கான செலவாக ஏற்கனவே அறிக்கையிடப்பட்டுள்ளது. எனவே, இந்தத் தொகையினை பெறவேண்டிய தொகையாக எங்களால் அங்கீகரிக்க முடியாது. | பெறவேண்டியவைகள், நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பெறவேண்டியவைகளாக கணக்கிடப்படவில்லை. | | | |
| (இ) | மகாவலி ஆலோசனை பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின்படி, செயற்திட்டத்திடமிருந்து பெறப்பட வேண்டிய வருமானம் ரூபா 2 மில்லியன் ஆகும். இருப்பினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்ககளில் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எதுவும் கானப்படவில்லை. | 2 | கணக்கீட்டில் காசு அடிப்படையினைப் பயன்படுத்தும் போது, வருமானங்கள் மற்றும் செலவுகள் காசு பெறப்படும்போது அல்லது செலுத்தும்போது மட்டுமே வெளிப்படுத்தப்படுகின்றன. மகாவலி ஆலோசனைப் பணியகம் அதன் செலவின அறிக்கையை செயற்த்திட்டத்திற்கு சமர்ப்பித்ததன் பின்னர் நாம் செலவினங்களை செயற்த்திட்ட கூறுகளின் செலவுகளாக வகைப்படுத்த முடியும். | செலுத்த வேண்டியவைகள் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்படல் வேண்டும். |

**3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை / கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் நி.பி. 371(ஆ) | தற்காலிக முற்பணங்களை வழங்குவது தொடர்பான நிதி ஒழுங்குவிதி 371 (ஆ) இன் பிரகாரம், குறிப்பிட்ட பணிகளுக்காக நிறுவன இயலுமையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பிரத்தியேகமாக ஒரு சந்தர்ப்பத்தில் ஆகக்கூடிய ரூபா 100,000 ஐ தற்காலிக முற்பணமாக வழங்க முடியும். இருப்பினும், இந்த ஒழுங்குமுறைக்கு முரணாக, செயற்திட்ட அதிகாரிகள் மற்றும் மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) கம்பனியால் குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கான ஒதுக்கீட்டு | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

ஏற்பாடுகளின் கீழ் அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதியின்றி 13 உத்தியோகத்தர்களுக்கு பதினெட்டாவது சந்தர்ப்பங்களில் ரூபா 5,179,540 முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4. பௌதீக முன்னேற்றம்

### 4.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | இச் செயற்திட்டம் தொடர்பான முக்கிய ஒப்பந்தம், திட்ட நிதியை வழங்கும் பசுமை காலநிலை நிதி (ஜீசீஎவ்) மற்றும் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான ஐயூசீஎன் ஆகியவற்றுடன் 2020 மார்ச் 13 அன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த ஆரம்ப வேலைக்காக தயாரிக்கப்பட்ட செயற்திட்ட ஆவணத்தின்படி, செயற்திட்ட நடவடிக்கைகள் 2023 ஜனவரி 17 இல் ஆரம்பிக்கப்பட்டு 2029 ஜனவரி 16 அன்று பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டது. இருப்பினும்கூட, செயற்திட்ட நடவடிக்கைகள் உண்மையில் 2023 ஆகஸ்ட் 10 அன்று ஆரம்பிக்கப்பட்டன. | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகள் உத்தேசிக்கப்பட்ட கால வரையறைக்குள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட ஆவணத்தின்படி, முதலாவது ஆண்டிற்கா ஐ.அ.டொலர் 5,186,805 மதிப்புள்ள நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன. இருப்பினும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதியாளவில், 01, 02 மற்றும் 04 ஆம் கூறுகளின் கீழான செலவுகள் 82,694 அமெரிக்க டொலர்களாக (ரூபா 26,462,082) மாத்திரமே காணப்பட்டன. விகிதாசாரப்படி, இது திட்டமிடப்பட்ட செலவில் 1.5% ஆகும். | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | செயற்திட்ட நிதியை குறித்த நோக்கத்திற்காக வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்ட ஆவணத்தின்படி, செயற்திட்ட நடவடிக்கைகள் 2023 ஜனவரி 17 இல் ஆரம்பிக்கப்பட வேண்டும், மேலும் ஆரம்ப அறிக்கை மற்றும் அடிப்படை அறிக்கை மூன்று மாதங்களுக்குள், 2023 ஏப்ரல் அளவில் வெளியிடப்பட வேண்டும். இருப்பினும், 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறு, இந்த அறிக்கைகள் வரைவு வடிவத்தில் கானப்பட்டதுடன் பசுமை காலநிலை நிதியத்தால் அங்கீகரிக்கப்படவுமில்லை. | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | செயற்திட்ட ஆவணங்களில் திட்டமிட்டபடி செயற்திட்ட நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்திற்காக பசுமை காலநிலை நிதியம் மற்றும் இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (ஐயூசீஎன்) ஆகியவற்றிற்கிடையே 2020 மார்ச் 13 அன்று கையெழுத்திடப்பட்ட நிதியளிக்கப்பட்ட நடவடிக்கை ஒப்பந்தத்தின் (எவ்ஏஏ) பிரகாரம் , தேசிய வழிநடத்தல் குழுவால் நிறுவப்பட்ட குழுவால் நடத்தப்பட்ட முறையான மற்றும் போட்டி செயல்முறை மூலம் செயற்திட்ட பணிப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எனினும் நீர்ப்பாசன அமைச்சு இந்த நடைமுறையைப் பின்பற்றவில்லை. மேலும், ஒப்பந்தத்தில் தனிநபர் ஒருவரே இந்த பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நீர்ப்பாசன அமைச்சு தற்காலிக அடிப்படையில் கருத்திட்டப் பணிப்பாளராக அமைச்சின் மேலதிக செயலாளரை நியமித்திருந்தது. | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | நிதியளிக்கப்பட்ட செயல்பாட்டு ஒப்பந்தத்தை கடைபிடிக்கவும். |
| (ஆ) | இதற்கு மேலதிகமாக, நீர்ப்பாசன அமைச்சிலிருந்து ஒரு பொறியியலாளர் பிரதி செயற்திட்ட பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார், ஆனால் | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | நிதியளிக்கப்பட்ட செயல்பாட்டு ஒப்பந்தத்தை கடைபிடிக்கவும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியளிக்கப்பட்ட நடவடிக்கை ஒப்பந்தத்தில் (எவ்ஏஏ) நடவடிக்கைஇவ்வாறான ஒரு பாத்திரம் குறிப்பிடப்படவில்லை. நியமனம் தொடர்பான மேலதிக தகவல்கள் வழங்கப்படவில்லை. மேலும் அவர் ''வெவ் கம் புபுதுவ" செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராகவும் மகாவலி ஆலோசனைப் பணியகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் ஒரே நேரத்தில் கடமையாற்றியுள்ளார். அத்துடன் முறையான நியமனம் இன்றி தேசிய வழிநடத்தல் குழுவில் உறுப்பினராகவும் பங்கேற்றிருந்தார். எனவே செயற்திட்ட நடவடிக்கைகளில் அவரது திறமையான பங்களிப்பு கணக்காய்வில் கேள்விக்குறியாக கானப்பட்டது. | | |
| (இ) | செயற்திட்டத்திற்கான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக, செயற்திட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் நிதியளிக்கப்பட்ட நடவடிக்கை ஒப்பந்தத்தின (எவ்ஏஏ) விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை 01/2019, குறிப்பாக பிரிவு 3.1 (இ) ஆகிய இரண்டிற்கும் முரணாக இருந்தது. மேலும், மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றும் பிரதி திட்டப் பணிப்பாளர், பல்வேறு சம்பள அளவுகளின் கீழ் இந்த நிறுவனத்தின் ஊடாக 39 நபர்களை ஊழியர்களாகவும் ஆலோசகர்களாகவும் தற்காலிகமாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு வசதியளித்து வருகிறார். 2023/2024 காலப்பகுதியில் இந்த தற்காலிக ஆட்சேர்ப்புகளுக்கு மொத்தம் ரூபா 52 மில்லியன் சம்பளமாக வழங்கப்பட்டிருந்தது | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | நிதியளிக்கப்பட்ட செயல்பாட்டு ஒப்பந்தத்தை கடைபிடிக்கவும். |

## 6 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக, தேவையான மோட்டார் வாகனங்கள் செயற்திட்டத்தினால் நேரடியாகவும் மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) கம்பனியினூடாக வெளி நிறுவனங்களினூடாகவும் வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டன. 2023/2024 காலப்பகுதியில் இத்திட்டத்தினால் வாகன வாடகையாக மொத்தம் ரூபா 35,008,999 செலுத்தப்பட்டது.<br>மேலும், பின்வரும் விபரங்களைக் குறிப்பிட்டு தேவையான திறைசேரியின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை: செயற்திட்டத்திற்கு தேவையான வாகனங்களின் வகை, அவற்றைப் பெற்றுக்கொள்ளும் முறை, செயற்திட்ட நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய செலவுகள் மற்றும் வாகனங்களை வழங்குவதற்குப் பொறுப்பான தரப்புகள். | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | திறைசேரியின் அனுமதியை பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். |